1967 நவம்பர் 27]

திரு. கே. விநாயகம்: இந்த ஷாக் அப்ஸார்பிங் ஹெல்மெட் என்று சொல்லப்படும் தொப்பியை யார் உற்பத்தி செய்கிறார்கள்? ஒரு தனி நிறுவனமும் இது மாதிரி தொப்பிகளை உற்பத்தி செய்ய முன் வரவில்லையென்றால், அரசாங்கமே தம்முடைய ஒர்க்ஷாப்பிலே உற்பத்திசெய்து, அதை மலிவான விலைக்கு ஸ்கூட்டர் ஓட்டுபவர்களுக்குத் தரத் தயாராக இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இதுபற்றி வழக்கு மன்றத்திலே ஒரு வழக்கு இருப்பதால், இங்கே தகவல்கள் கொடுப்பது அவ்வளவு உசிதமாக இராது.

அரிசி அரைவை ஆலைகள்

*460 வினா—திரு. கரு. சீமைச்சாமி: மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1966-ம் ஆண்டில் ரைஸ் மில்கள் நிறுவுவதற்காக வழங்கப்பட்ட லைசென்சுகள் எத்தனை, மாவட்டவாரியாக?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: சட்ட மன்றத்தின் முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. கரு. சீமைச்சாமி: ரைஸ் மில்கள் நிறுவுவதற்காக லைசென்ஸ் வழங்கப்படுவதில் ஊழல் ஏற்பட்டதன் காரணமாக, அதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உணவு இலாக்காவிலிருந்து மாற்றப்பட்டார்களா? அப்படி மாற்றப்பட்டிருந்தால், அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இதுமாதிரியான தகவல் ஒன்றும் இல்லை.

*461 வினா—திரு. இல. பலராமன்: மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாநில சர்க்கார், ரைஸ் மில்களுக்கு வழங்கும் லைசென்ஸ் முறையை ரத்து செய்யும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: 1958-ம் ஆண்டு அரிசி அரைவை தொழில் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் 5-ம் பிரிவின் கீழ் அரசினால் வழங்கப்படும் அனுமதிச்சீட்டுகள் பற்றித்தான் மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றார். இவ்வனுமதிச் சீட்டு வழங்கும் முறையை ரத்து செய்வது குறித்து எவ்வித செயற்குறிப்பும் அரசின் ஆய்வில் இல்லை.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, இதுபோன்ற ரைஸ் மில்கள் நடத்த அனுமதி வழங்கும் சீட்டு கேட்டு விண்ணப்பம் செய்துள்ள நபர்கள் தமிழகம் பூராவும் அதிகமாக இருப்பதாகக்

---

* 93-ம் பக்கத்திலுள்ள இணைப்பைப் பார்க்கவும்.